RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1119

OPEN ACCESS

# முற்போக்குச் சிந்தனையாளரான பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள்

**கு. கார்த்திகா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி-635207, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Thoughts of Progressive Thinker Bharathi

**K. Karthika** [a, *]

[a] Department of Tamil, Adhiyaman Arts & Science College for women, Krishnagiri–635207, Tamil Nadu, India

* Corresponding Author: kaarthikaradha@gmail.com

Received: 16-08-2021
Revised: 11-07-2022
Accepted: 16-07-2022
Published: 10-09-2022

Check for updates

## ABSTRACT

Feminism is about the liberation of women. For ages, women have been trapped and enslaved in a patriarchal society without the right to even think for themselves. They are being oppressed. They are being crushed and staged all the time. From the family to the country, it is considered secondary. Bharathiyar was shocked to see these atrocities and plight. He was a free revolutionary. He, a mundasu kavi (a poet identified by wearing a turban), was a progressive thinker. He was a man of his era who started talking about feminism for the liberation of women. What was the source of his idea that women should be emancipated? How to treat the female race? What should society do for the advancement of women? In this article, it is seen from what point of view they should be seen through his works. In that way, women's liberation, denial of education, love, marriage, divorce, remarriage, domesticity, politics, and heroism should be improved in all fields. Bharathi's statement that women should decide their rights and also the need for their personal freedom is explained in this article.

**Keywords:** Feminism, Bharathiyar, Mundasu Kavi, Liberation

## முன்னுரை

பெண் விடுதலையை மூச்சாகக் கொண்டு தன் எழுத்து என்னும் ஆய்தத்தால் பெண்ணுரிமைக்காகப் போராடியவர் பாரதியார். இவர் தம் படைப்புகள் வழியாகவே இச்சமூகத்திற்குப் புதுநெறிக் காட்டியவர். பெண் விடுதலைக்குப் பாரதியின் கவிதைகள் கட்டுரைகள், கதைகள் ஒரு விடிவெள்ளியாகும். இவர் வாழ்ந்த காலகட்டத்தில் பாரத அன்னை அடிமைத்தளையில் கட்டுண்டு இருந்த காலம். இதை விட கொடுமையானது பெண்களின் நிலை மிகுந்த வேதனைக்குரியதாகவும், அவலநிலையையும் அடைந்த சூழல். பெண்கள் அடிமைப்பட்டுச் சிக்குண்டுக் கிடக்காமல் சிறகடித்து வானில் பறக்க பிறந்தவர்கள் என்று நினைத்தவர். அக்காலத்தில் உடன்கட்டை ஏறுதல், விதவைகளின் மீதமான இழிவுநிலை, குழந்தைத் திருமணம், எனப் பல இன்னல்களில் சிக்கித் தவித்த காலம். இந்தக் கொடுமையை எதிர்த்துப் பெண்களுக்காகப் பாட்டிசைத்துப் புரட்சி செய்தவர். சமுதாயத்தில் மனித இனம் தோற்றத்திற்கும் அதன் பல்வேறு செயல் பரிணாமத்திற்கும் பெண்கள் அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை அவளுடைய பங்கு மிகவும் ஆழமானது என்பதை உணர்த்தவர். ஆகவே பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்னும் சொல் பெண்களின் விடுதலையைப் பேசக்கூடியவையாகும். கி.பி.17 முதல் கி.பி. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியச் சிந்தனைகள் நம் சமூகத்தில் தலைத்தோங்க தொடங்கியது. அதாவது "பெண்ணியம் என்ற சொல் மிக அண்மைக் காலத்தில் தோன்றி வளர்ந்து வருகிறது. அது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அதோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், அவள் ஆணுக்குச் சமமானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்கிறது" எனப் பிரிட்டானியக் கலைக் களஞ்சியம் பெண்ணியத்திற்கு விளக்கம் தருகிறது. இன்றைய சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாகக் காணப்படுகிறது (Panchankam, 2000). ஆணும் பெண்ணும் பாலினப் பாகுபாடுகள் இன்றி ஒரு சக மனிதர்களாக நினைக்கவேண்டும். பெண்களுக்குச் சமஉரிமை, சமூக மதிப்போ இன்று கிடைக்கின்றது என்று சொன்னாலும் அது முழுமையாகக் கிடைத்துவிட்டதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளன. இன்றளவும் பெண்ணுரிமை பேச்சளவே மட்டுமே காணப்படுகின்றன. சிறு பெண் குழந்தைகள் முதல் வயது முதியவர்கள் வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். ஆணாதிக்கம் என்பது அவளுடைய குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. அவளுடைய கனவுகள், ஆசைகள், விருப்பங்கள், என அனைத்தும் அவளுடைய மனதில் புதைக்கப்படக்கூடியவளாகவே காணப்படுகிறாள். முதலில் அனைத்திற்கும் சமமானவர் என்று கூறும் நாம் குடும்பத்தில் உள்ள ஆண்கள், பெண்களைச் சமமாகத் தனக்கு நிகராக மதிக்க வேண்டும். உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும். பின்பு தான் அது சமூகம், நாடு என்ற அளவில் வளர்ந்து மாற்றத்தை உண்டாக்கும்.

## பெண்ணியம் - பொருள்

Feminism என்னும் ஆங்கிலச் சொல் Femina எனும் இலத்தின் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம் பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண்நலக்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. "பெண்ணியம் என்ற இச்சொல் 1890 - இல் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப்பயன்பட்டு வருகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டிலேயே இச்சொல் பெருவழக்கில் வந்தது" என்கிறார் (Prema, 1998). பெண்ணைச் சார்ந்திருக்கும் குடும்பம், சமூகம், பண்பாடு, உடல், உணர்வுகள், ஆகியவற்றின் வழிநின்று பேசுவதே பெண்ணியத்தைக் குறிப்பதாகும்.

## பெண் விடுதலை

பாரதியார் நாட்டு விடுதலை பெற வேண்டுமானால் முதலில் பெண் விடுதலை பெற வேண்டும் என்கிறார். பெண்கள் பற்றிய சிந்தனையை முழுவதுமாக மாற்றி, பெண்ணுரிமைக்காகப் போராட வேண்டும் என்ற எண்ணத்தை முதலில் அவருக்கு விதைத்தவர் சகோதரி நிவேதிதா அவர்கள். ஒரு முறை காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்ற பாரதியார் கொல்காத்தாவில் தங்குகிறார். அங்குச் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்து உரையாடுகிறார். அப்போது நிவேதிதா, ஏன் உங்கள் மனைவியை அழைத்து வரவில்லை? எனப் பாரதியைப் பாரத்துக் கேட்டுகிறார். எங்களின் சமூக வழக்கப்படி பெண்களை வெளியில் அழைத்துச் செல்வதில்லை. அதுமட்டுமல்லாமல் என் மனைவிக்கு அரசியல் பற்றி எதுவும் தெரியாது என்கிறார். அதற்கு நிவேதிதா, உங்கள் மனைவிக்குச் சம உரிமை கொடுக்காத நீங்கள் எப்படி நாட்டுக்கு விடுதலைப் பெற்றுத் தருவீர்கள்? என்று கேள்வி கேட்டுகிறார். அந்தக் கேள்வி பாரதியின் மனதை உலுக்கியதோடு இல்லாமல் சிந்திப்பதற்கு அடித்தளமாக அமைகிறது. இவருடைய சந்திப்புத் தான் சுதந்திரப் போராட்டத்தில் தீவரமாக ஈடுபடுவதற்கும், உணர்ச்சி மிகுந்த கவிதைகள், கட்டுரைகள் இயற்றுவதற்கும் காரணமாகவும் இருந்தன.

பெண் விடுதலை பெற வேண்டுமானால் அவள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். பெண்களை இழிவுப்படுத்துவது அறிவற்ற செயல் அதனை அறவே நீக்க வேண்டும் என்று தம் கவிதையில் வெளிப்படுத்துகிறார் (Kalpana, 2020). அதனை,

"மாதர் தம்மை இழிவு செய்யு

மடமை யைக் கொளுத்துவோம்"

என்கிறார் (Bharathiyar, 2003). அதோடுமட்டுமல்லாமல் பெண் என்பவள் குடும்பத்தைக் கவனிப்பது மட்டுமே அவளுடைய செயலாகவும், அறிவாகவும் பார்க்கப்படுகிறாள்.

பெண் விடுதலைப் போராட்டத்தைப் பாரதப் போராகவும், பாஞ்சாலியைப் பாரத தேவியாகவும் உருவகப்படுத்தி பாஞ்சாலி சபதத்தை இயற்றியுள்ளார். பெண்ணின் உரிமையைப் பெண் மூலமாகவே கேட்க வைத்தவர். அவளுடைய உரிமையை அவள் தான் போராடிப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவது சிறப்புக்குரியது. ஆண் வர்க்கத்தின் அதிகாரத்தைக் கேள்வி கேட்பதாகப் பாரதி பாஞ்சாலி வழி நின்று பேசுகிறார். பாஞ்சாலி என்னும் பெண் அவர் கனவு கண்ட புதுமைப் பெண்ணின் வடிவமாகும்.

துரியோதனன் அவனுடைய தேர்ப்பாகன் விதுரனிடம் திரௌபதியை அவைக்கு அழைத்துவரச் சொன்னதாகச் சொல்கிறான். அதற்குக் கோபம் கொண்ட பாஞ்சாலி சூதாடும் சபையில் மறக்குலத்துப் பெண்கள் வரக்கூடிய மரபு உண்டா? என்று கேட்கிறாள். இங்கு பாஞ்சாலி என்பவள் பாரத தேவியாகவே பாரதியார் கருதுகிறார். சூதாட்டத்தில் தன்னைப் பணையப் பொருளாக வைத்ததைக் கேள்விப்பட்டதும் கொதித்தெழுகிறாள். அதனை,

"வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்

என்னை முன்னே கூறியிழந்தாரா? தம்மையே

முன்னை மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?"

சென்று ஸபையில் இச்செய்தி தெரிந்துவா (Subramanya Bharathiyar, 2000). என்னும் வரிகளில் பாஞ்சாலி விதுரனிடம் கேட்கும்பொழுது பாண்டவர்கள் தம் இழந்த பின்னர் என்னைப் பணையம் வைத்தனரா அல்லது முதலில் என்னை இழந்து, பின்னர் தம்மைப் பணையம் வைத்தனரா என்று கேட்கிறார். ஒருவேளை தம்மை முன்னரே இழந்திருந்தால் என்னைப் பணையம் வைக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை என்கிறாள். தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடுகிற வீரப் பெண்ணாகப் பாஞ்சாலியைப் படைத்துக்காட்டுகிறார். பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் விடுதலைக்கருவே முதன்மைப்பெறுகிறது. அரசர்களின் ஆதிக்கம், பெண்ணடிமைத்தனம் இவற்றிற்கு எதிர்த்து இச்சமுதாயத்தில் எது நியதியோ அதுவே தம் படைப்பில் சுட்டிக்காட்டுகிறார். கணவன் மனைவியை அடிமையாக நடத்துவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கும் இவர் மனைவி ஒருத்தியை அடிமைப்படுத்த வேண்டி தாய் குலத்தை முழுவதும் அடிமைப்படுத்தாலோமா என்கிறார்.

## ஆண் + பெண் = சமம்

ஆணுக்குப் பெண் சமமானவர்கள். ஆண் பெண் சமத்துவமே பெண்ணியத்தின் சாலச் சிறந்தாகும். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் வீட்டுக்குள்ளே அடைந்து இருக்கக் கூடிய சூழலை முற்றிலுமாக நீக்க வேண்டும் என்று எண்ணினார். ஆணும், பெண்ணும் அனைத்திலும் சமம் என்று அவர் பேசுவதோடு நிறுத்தவில்லை. பெண்மையை மேன்மைப்படுத்தியே பாரதி பேசுகிறார். அதனை,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கியவ் வையந் தழைக்குமாம்

நாணும் மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்

பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்

பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ?"

என்கிறார் (Murthi, 2010). ஆணும் பெண்ணும் ஒருவர்கொருவர் நிறைவுதருதலால் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் இன்றியமையாதவர்கள். எனவே இவர்கள் சமமானமாவர் எனக் கொள்ளல் வேண்டும். அப்படிக் கொள்ளுவதனால் தான் மக்கள் அறிவினால் மேம்பாடுற்று இவ்வையகம் சிறப்படைய வழி பிறக்கும். நல்லறத்தையே பூணாகக் கொண்டு பெண்ணுருவில் தோன்றிலிருப்பது உலக மாதாவாகிய சக்தியே! அந்தச் சக்தி தெய்வத்துக்கு அச்சமும் நாணமும் அமைந்திருக்க வேண்டும் என்று சொல்வது பேதையாகும். நாய்களுக்கன்றே அந்தக் குணங்கள் அமைய வேண்டும். ஞானமும் நல்ல அறநெறியும், வீர சுதந்திரமும், நற்குடியில் பிறந்தவள் என்ற பெயரைப் பேணத் தகுந்த ஒழுக்கம் அன்றோ பெண்ணுக்கு வேண்டிய குணங்கள் பெண்மையின் தெய்வசக்தி இப்படியெல்லாம் பேசுவதைக் கேளுங்கள் என்கிறார். பண்டைய காலத்தைச் சற்று நோக்கும் பொழுது சங்க காலத்தில் ஆண் புலவர்களுக்கு இணையாகப் பெண் புலவர்கள் இருந்தார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் தொல்காப்பியர் ஆண், பெண் என இருபாலருக்கும் தனித்தனி வரையறைகள் வகுத்துள்ளார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயல்புகள் உண்டு. ஆளுமைத் தன்மை உடையவரை ஆண் என்னும் சொல்லாலும், பேணும் தன்மை உடையவர்களைப் பெண் என்னும் சொல்லாலும் வழங்கப்படுகிறது, ஆண் என்பவன் பலராலும் மதிக்கப்படும் பெருந்தன்மை கொண்டவர்கள், பெண்களைக் காட்டிலும் அதிக உடல் வலிமை கொண்டவர்கள் என்று கூறுகிறார். பெண்ணிற்கு அச்சம், நாணம், மடம், நிச்சம் ஆகியவை பெண்ணிற்கு உரியவை என்று கூறுகிறார். இங்கு தொல்காப்பியர் காலத்திலும் ஆண் இனத்தைத் தூக்கிப் பிடிப்பதைக் காணமுடிகின்றது.

## பெண் கல்வி

பெண்களுக்கு அறிவை வளர்த்தால் இந்த உலகின் பேதமையை அற்றுப்போகச் செய்யும் என்று எழுதியவர் பாரதியார் (Kalpana, 2020). இவர் வாழ்ந்த காலகட்டம் பெண்ணுரிமை மறுக்கப்பட்ட காலமாகும். எந்த உரிமையும் இல்லாமல், பெண்களுக்குக் கல்வியும் மறுக்கப்பட்டு, வீட்டுச்சிறையில் அடிமைப்படுத்தப்பட்ட காலமாகும். பெண்கள் பல கற்று, நாட்டை வழி நடத்தி செல்லுமளவிற்குப் பெண்கள் சமுதாயத்தில் உயர்வு பெற்று இருக்க வேண்டும் என்பதே பாரதியின் விருப்பம் என உணரமுடிகின்றன. பெண்களின் முன்னேற்றத்திற்குக் கல்வி பெரும் அடித்தளமாக அமைய வேண்டும் என்பதை "ஆண்களுக்கு ஸமமான கல்வித் திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும் வரை, ஆண்மக்கள் பெண்மக்களைத் தக்கபடிமதிக்க மாட்டார்கள். தாழ்வாகவே நடத்துவார்கள்" என்கிறார் (Jayakanthan & Balasubramaniyam, 2009).

அறிவு என்பது ஆணுக்குரியது மட்டுமல்ல. இது ஆண் பெண் என்று பேதமில்லை. இது இருவருக்கும் பொதுவானது. வேதங்கள் இயற்றிடவும், நீதிகள் செய்யவும், சாதம் படைக்கவும், தெய்வ சாதி படைக்கவும் பெண்களுக்குத் திறமைகளும், அறிவுகளும் உண்டு என்கிறார். பலவிதமான சாத்திரங்கள் கற்பாள். வாழ்க்கை வசதிகள் பலவற்றை நூதனமான முறையில் செய்வாள். பழைய மூடக்கட்டுப்பாடுகளையெல்லாம் அழிப்பாள். மனிதர் செயல்களைக் காத்து அறத்தின் வழியே ஒழுகச் செய்து தேவர்களும் மகிழும் படி செய்வாள். ஆண்கள் எல்லோரும் பெருமை கொள்ளும் அளவிற்கு இவ்வுலகில் வாழ்ந்துக்காட்டுவாள் என்கிறார். நெஞ்சிலே வஞ்சனை இல்லையாதலால் நிமிர்ந்த நன்னடையும், நேரான பார்வையும், யாருக்கும் அஞ்சாத ஒழுக்கமும், நிறைந்த ஞானத்தினால் உண்டான பூரிப்புமாகிய இவையெல்லாம் இருப்பதனாலே செந்நெறியுள்ள பெண்கள் ஒழுக்கத் தவறமாட்டார்கள். பெரிய இருளாகிய அறியாமையில் மூழ்கி அவலப்பட்டுக் கல்வியின்றி ஞானமின்றி வாழும் இருண்ட வாழ்வை இகழ்ந்து தூவெனத் தள்ளிவிடுதலை பெண்ணுக்கு அறம் என்கிறார்.

பாரதியார் காலத்துப் பெண்கள் கல்விக் கணக்கெடுப்பிடைப்பினை தம் கட்டுரையின் வாயிலாகக் குறிப்பிடுவதாக, "1901 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் 10,000 பெண்களுக்கு வெறும் 94 பெண்கள் மட்டுமே கல்விப்பயிற்சி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இவர்களில் கூட கிறிஸ்துவப் பெண்களே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். கல்வியறிவில்லாமல் அறிவிருண்டு கிடக்கும் மாதரின் தொகை இவ்வுளவு மிகுதிப்பட்டிருக்கும் தேசத்தின் முன்னேற்றம் குறித்துப் பாரதி மிகவும் வேதனைப்படுகிறார்" என்கிறார் (Panchankam, 2000). பெண்கள் கல்விக் கற்றுத் தேர்ந்து தங்கள்

கணவனுக்கு உதவியாய் அவர்கள் இருத்தல் வேண்டும். கல்வியில்லாமல் சுயமாகச் சிந்திக்கக் கூடிய சிந்தனையில்லாமல், பகுத்தறிவும் சக்தியின்றி இருத்தல் கூடாது என்று கூறுகிறார். பெண்கள் அறிவு மங்கி அறியாமை என்னும் இருளில் தள்ளிவிட்டு நீங்கள் மட்டும் மேலான நிலைமைக்கு வந்து விட முயல்வது வீண் முயற்சி அது ஒரு போதும் நடக்காது என்று ஆண் சமூகத்தினருக்குச் சுட்டுக்காட்டுகிறார். பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தைக் கொண்டவர். பாரதி புதுமைப்பெண் உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேர்ந்து பற்பல நூல்வகை கற்று, நாற்றிசை நாடுகள் சென்று புதுமைக் கொணர்ந்து பாரத தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டும் என்று உணர்த்துகிறார்.

## பெண்மையும் - கற்பு

பெண்ணிற்குக் கற்பு என்பது மிகவும் முக்கியமானது. பெண் என்பவள் கற்புடையவளாக இருக்க வேண்டும். தன் கணவனைத் தவிர மனதளவில் கூட வேற்றொருவரை நினைக்கக் கூடாது என்ற வரையறைகள் அக்காலத்தில் இருந்தே நிலவி வருகின்றன. பெண்களின் மானம் தெய்வபக்தி என்றெல்லாம் இந்த வஞ்சகர் பேசுகிறார்களே, உண்மையில் இவர்கள் அவற்றில் நம்பிக்கையுடையவர்களா? அப்படியானால் அந்நியர் நம் பாரதப் பெண்ணின் கற்பை அழித்துக் கொடுமைகள், செய்யப் பார்த்துக் கொண்டு பேதையர் போல் வாளா இருப்பாரா? தேவியின் கோயிலிலே சொல்லொணாத கொடுமைகள் எல்லாம் அந்த அந்நியர் செய்யும் போது தங்கள் உயிரே பெரியதென்று அஞ்சியோடி ஒளித்தார்களே? இவர்களா சுதந்திர பற்றுக் கொண்ட உண்மை சுதேசிகன் ஏன்று கேள்விகள் கேட்டுகிறார். ஆணும் பெண்ணும் சமம். பெண்ணிற்குக் கற்பு உண்டு என்றால் ஆணிற்கும் கற்பு உண்டு. ஆகவே கற்பு என்னும் சொல்லை நாம் பொதுமையில் வைப்போம் என்றார். அதே போன்று பெண்ணிற்கு விருப்பம் இல்லாமல், வற்புறுத்தி திருமணம் செய்து வைத்தல் கூடாது. அந்த வழக்கத்தை நாம் தள்ளி மிதித்திடுவோம் என்று கூறுகிறார். அதனை,

"கற்பு நிலையென்று சொல்லவந் தாரிரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்

வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்பதை உணர்த்துகிறது இப்பாடல் வரிகள். மேலும், நிலத்தின் தன்மை அதில் விளையும் பயிர்களுக்கும் உண்டாகும் (Meiyappan, 1992). அதுபோல இழிவான அடிமை வாழ்வும் அறியாமையும் கொண்டதாய், மாண்புமிக்க அறிஞர்களான மக்களைப் பெற்றெடுத்தல் அரிதினும் அரிது. நல்ல குலத்துப் பெண்களென்றால் அவர்களின் இயல்பு கற்பு ஒன்று தான். அந்த நலந்தரும் கற்பினைக் காப்பதற்காகத் தான் வீட்டில் பூட்டி வைத்துக் கொடுமை செய்கிறோம். அவர்களுக்குக் கல்வியும் அறிவும் மறுக்கப்படுகிறது என்று சொல்வது மட்டுமின்றி அவர்கள் நலத்தைக் காக்க விரும்புதல் தீமையையும் வளர்க்கும். இப்படியாகப் புதுமைப் பெண் கூறும் வியப்புகளைக் கேளுங்கள் என்கிறார். அதாவது பாரதியாருடைய காலத்தில் பெண்களை வீட்டிலே பூட்டி வைத்து அடிமைகளிலும் கொடுமையாக நடத்தி வாழ்வில் ஒரு சுதந்திரமும் இல்லாமல் செய்து வைத்திருந்தார்கள் என்பது உணரமுடிகிறது. பெண்களை வீட்டில் பூட்டி வைப்பது கற்பு போய்விடாது என்று கூறும் பாரதி, "மாதர் தம் கற்பின் புகழிலே உயர்நாடு" என்பது கற்புடைய பெண்களால் இல்லறம் உயர்வடைவதுடன், நாடும் உயர்வடையும் என்பதை உணர்த்துகிறார் (Bharathiyar, 2003). குடும்ப வாழ்க்கையில் பழைய சாத்திரங்களின் பேரில் மூட வழக்கங்களைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு, அறிவு நெறியில் சிந்தித்து மாற்றம் அடைந்து வாழ வேண்டும் என்று விரும்பியர். பெண்ணின் ஒழுக்கம் பேசும் ஆண் இனமும் ஒழுக்கம் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

## பெண்மையும் தெய்வமும்

பாரதி பெண்களைப் புகழ்ந்து தெய்வநிலைக்குக் கொண்டு செல்கிறார். உன் தாயை விட வேறு தெய்வம் உண்டா என்று கேட்டுகிறார். உன் தாயும் பெண் அல்லவா. மனைவி, தமக்கை, தங்கை முதலியோர் பெண்கள் ஆவார்கள். பெண்களிடத்தே வெளிப்பாடாமல் இதுவரை மறைந்து நிற்கும் நம் தெய்வ சக்தியான பராசக்தி எனக் குறிப்பிடுகிறார். பெண்மையைப் பெண்தெய்வங்களாக வழிபட சொல்கிறார். இந்த உலகினையே மாற்றிப் புதுமை பெறச் செய்து மனித வர்க்கத்தையே தேவர்களாக்க ஆற்றலுடன் தோன்றியுள்ள அன்னை பராசக்தியன்றோ இப்புதுமைப் பெண்கள் என்கிறார் (Senthamizh Pavai & Arivudainambi, 2021). அதனை,

“தாய்க்குமே லிங்கேகேயார் தெய்வ முண்டோ?

தாய் பெண்யே யல்லளோ? தமக்கை, தங்கை

வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?

“காதல் செயுமனைவியே சக்தி கண்டீர;

கடவுணிலை அவளாலே யெய்த வேண்டும்”

இவ்வரிகள் உணர்த்துகின்றன (Bharathiyar, 2003).

## விதவை மறுமணம்

கணவனை இழந்த பெண்கள் இச்சமூகத்தில் அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. கணவனை இழந்தவுடன் அவர்கள் மொட்டயடித்து, வெள்ளையாடை அணியவைத்து, ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கின்றனர். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லாத அளவிற்கு அடிமைப்படுத்தும் நிலை அக்காலத்தில் நிலவி இருந்தது. இவை அனைத்தும் சொத்துச் சார்ந்தே நடத்தப்பட்டவை. பாரதியார் காலத்தில் விதவைகள் மிகவும் மோசமாக நடந்தப்பட்டார்கள் என்பது தெரியவருகிறது. அதற்கு எதிர்ப்புக் குரலாக, விதவைகள் எந்த வயதிலும் தமது வயதிற்குத் தகுந்த ஆடவரை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்தத் தேசத்து விதவைகளின் வாழ்க்கை நகர வாழ்க்கையினும் கொடியதாய் எண்ணற்ற துன்பங்களுக்கு இடமாகிறது. எல்லா விதவைகளும் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிற்கும் பெரிதான ஒன்று. இந்த அநிநாயத்திற்குத் தகுந்த மாற்று என்கிறார் (Kalpana, 2020). விதவைகளின் மறுவாழ்வு பற்றிக் குறிப்பிடும் பாரதி “கணவனை இழந்த மாதர் அவர்கள் கணவரை இழந்தார்களளேயன்று, உடலை இழக்கவில்லை. ஐம்புலன்களை இழக்கவில்லை, உணர்வை இழக்கவில்லை, மனுஷ்ய ஹிருதயத்தை இழந்துவிடவில்லை காம விருப்பத்தை இழக்கவில்லை காமக் கருவிகளை இழக்கவில்லை அவர்கள் கல்லாய்விடவில்லை மண்ணாய்விடவில்லை” என்கிறார் (Bharathiyar, 2003). இதைக் கவனிக்கும் பொழுது அவருடைய காலத்தில் கைம்பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகளுக்கும் எதிர்குரல் கொடுத்துப் பேசியது மிகவும் பெருமைக்குரியது.

## முடிவுரை

பாரதியார் தமது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பெண்ணுரிமைக் கருத்துக்களை அவருக்கே உரித்தான கவியழகோடும், அழுத்தத்தோடும் சிந்தனைகளைத் தூண்டும் அளவிற்குத் தம் பாடல்களை இயற்றியுள்ளார். பெண் விடுதலை, கல்வி, இல்லறம், மறுமணம், என அனைத்திலும் மேன்மையில் சிறந்து உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது இவரது இலட்சியமாகவே இருந்ததுள்ளதைக் காணமுடிகின்றன. இவர் தம் மனதில் பெண்களைப் பாரதமாதா, சுதந்திரதேவி, தமிழ்த்தாய் எனப் பலவறாக உருவகித்துள்ளார். பெண்ணியம் குறித்துப் பாரதியார். இயற்றிய படைப்புகளில் பெண்ணியக் கருத்துக்கள் அனைவருக்கும் அறிவிற்குச் சான்றாக விளங்குகின்றன என்பது வெளிப்படை.

## References


Bharathiyar, (2003) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Jayakanthan, Balasubramaniyam, (2009) Mahakavi Bharathiyarin Katturaikal, Sakithya Academy, New Delhi, India.

Kalpana, B., (2020) Bharathi's Concept of Women Liberation: Legacy and novelty, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India. https://doi.org/10.34256/tak20201

Meiyappan, S., (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Murthi, V.A., (2010) Bharathi Padakal, Samugam books, Jaffna, Srilanka.

Panchankam, K., (2000) Mahakavi Bharathin Penniya Katturaikal, Annam, Tanjore, India.

Prema, R., (1998) Penniyam, Tamil Puthagaalaiyam, Chennai, India.

Senthamizh Pavai, S., Arivudainambi, C., (2021) Power worship of Bharatiyar songs, International Research Journal of Tamil, 3(S-2), 164-169. https://doi.org/10.34256/irjt21s232

Subramanya Bharathiyar, (2000), Bharathiyar Katturaikal, Sri Hindu Publications, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License